DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ALANGULAM

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | CC 1 /17 |
| Sessions | } | |
| | | Prosecution P.W. 7 |
| Deposition of witness for | { | Defence |
| | | Court |
| Name | : | டாக்டர். ஷ்யாம் சுந்தர்சிங் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2019

மு.வி :- நான் திருநெல்வேலி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உறைவிட மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.04.16ம் தேதியன்று இரவு 9.30 மணியளவில் திருநெல்வேலி மருத்துவ கல்லூரியல் நான் அவசர சிகிச்சையில் நான் பணியிலிருந்த வள்ளி என்ற பெண்ணை அவருடைய மகன் மாரியப்பன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது அவர் அதே நாள் இரவு 7.00 மணியளவில் அவரின் வீட்டின் அருகே இனம் தெரிந்த நபர் கம்பால் தாக்கியதாக கூறினார்.. பரிசோதனையின்போது அவருக்கு வெளிகாயங்கள் ஏதும் இல்லை. அவர் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் முடிவில் அவருக்கு உள்காயங்களோ, வெளிகாயங்களோ எதுவும் இல்லை என்று நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய சான்று அ.சா.ஆ. 2 ஆகும். இந்த வழக்கின் மற்றொரு காயம் பட்ட நபர் மாரியப்பனுக்கு சிகிச்சை அளித்த எங்கள் மருத்துவமனை மருத்துவர் திருமதி. ஆஸ்மி தற்போது மேற்படிப்புக்காக சென்றுவிட்டார். மேற்படிப்புக்காக

பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவரது கையொப்பம் எனக்கு தெரியும் . காயச்சான்றிதழை பார்த்து நான் சாட்சியம் சொல்கிறேன். 05.4.16ம் தேதியன்று காலை 9.00 மணியளவில் டாக்டர் ஆஸ்மி என்பவர் பணியில் இருந்தபோது மாரியப்பன் என்பவர் அவருடைய மனைவி பிரேமா என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் . அவரை விசாரித்தபோது அன்றையதினம் இரவு 7.00 மணிக்கு அவரது வீட்டின் அருகே இனம் தெரிந்த இரண்டு நபர்கள் தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ்கண்ட காயம் காணப்பட்டது. இடது தோள்பட்டையில் 2x1 Cm சீராய்ப்பு காயம் காணப்பட்டது. அவர் சிகிச்சகைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். ஆனால் 06.04.16ம் தேதியன்று மருத்துவரின் அனுமதியின்று வெளியேறிவிட்டார். மருத்துவமனை பதிவேடுகளின்படி அவருக்கு சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அந்த சான்று அ.சா.-ஆ. 3 ஆகும்.

கு.வி.- இல்லை